ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருவண்புருடோத்தமம்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருவண்புருடோத்தமம்

## பொதுத்தனியன்கள்

ராமாநுஜ த$_3$யாபாத்ரம் ஜ்ஞாநவைராக்$_3$ய பூ$_4$ஷணம் ।
ஸ்ரீமத்$_3$வேங்கடநாதா$_2$ர்யம் வந்தே$_3$ வேதா$_3$ந்ததே$_3$ஶிகம் ॥ **1** ॥

ஸ்ரீஶைலேஶ த$_3$யாபாத்ரம் தீ$_4$ப$_4$க்த்யாதி$_3$கு$_3$ணார்ணவம் ।
யதீந்த்$_3$ரப்ரவணம் வந்தே$_3$ ரம்யஜாமாதரம் முநிம் ॥ **2** ॥

லக்ஷ்மீநாத$_2$ஸமாரம்பா$_4$ம் நாத$_2$யாமுநமத்$_4$யமாம் ।
அஸ்மதா$_3$சார்யபர்யந்தாம் வந்தே$_3$ கு$_3$ருபரம்பராம் ॥ **3** ॥

யோ நித்யமச்யுதபதா$_3$ம்பு$_3$ஜயுக்$_3$மருக்ம -
    வ்யாமோஹதஸ்ததி$_3$தராணி த்ரு’ணாய மேநே ।
அஸ்மத்$_3$கு$_3$ரோர்ப$_4$க$_3$வதோஸ்ய த$_3$யைகஸிந்தோ$_4$:
    ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்$_3$யே ॥ **4** ॥

மாதா பிதா யுவதயஸ்தநயா விபூ$_4$தி:
    ஸர்வம் யதே$_3$வ நியமேந மத$_3$ந்வயாநாம் ।
ஆத்$_3$யஸ்ய ந: குலபதேர்வகுளாபி$_4$ராமம்
    ஸ்ரீமத் தத$_3$ங்க்$_4$ரியுக$_3$ளம் ப்ரணமாமி மூர்த்$_4$நா ॥ **5** ॥

பூ$_4$தம் ஸரஶ்ச மஹதா$_3$ஹ்வய ப$_4$ட்டநாத$_2$
    ஸ்ரீப$_4$க்திஸார குலஶேக$_2$ர யோகி$_3$வாஹாந் ।

ப$_4$க்தாங்க்$_4$ரிரேணு பரகால யதீந்த்$_3$ர மிஶ்ராந்
ஶ்ரீமத் பராங்குஶமுநிம் ப்ரணதோऽஸ்மி நித்யம் ॥ **6** ॥

## பெரியாழ்வார் தனியன்கள்

கு$_3$ருமுக$_2$மநதீ$_4$த்ய ப்ராஹ வேதா$_3$நஶேஷாந்
நரபதிபரிக்லு’ப்தம் ஶுல்கமாதா$_3$துகாம: ।
ஶ்வஶுரமமரவந்த்$_3$யம் ரங்க$_3$நாத$_2$ஸ்ய ஸாக்ஷாத்
த்$_3$விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி ॥

மின்னார் தட மதிள் சூழ் வில்லிபுத்தூர் என்றொரு கால் ⋆
சொன்னார் கழற்கமலம் சூடினோம் ⋆
முன்னாள் கிழி அறுத்தான் என்றுரைத்தோம் ⋆
கீழ்மையினிற் சேரும் வழி அறுத்தோம் நெஞ்சமே ! வந்து

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தான் என்று ⋆
ஈண்டிய சங்கம் எடுத்தூத ⋆
வேண்டிய வேதங்களோதி விரைந்து கிழி அறுத்தான் ⋆
பாதங்கள் யாமுடைய பற்று

## பெரியாழ்வார் திருமொழி – திருப்பல்லாண்டு

‡ பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு ⋆
பல கோடி நூறாயிரம் ⋆
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா ! ⋆
உன் சேவடி செவ்வி திருக்காப்பு ॥ **1.1.1** ॥

‡ அடியோமோடும் நின்னோடும் ⋆
பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு ⋆
வடிவாய் நின் வல மார்பினில் ⋆

வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு ⋆
வடிவார் சோதி வலத்துறையும் ⋆
சுடராழியும் பல்லாண்டு ⋆
படை போர் புக்கு முழங்கும் ⋆
அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே ॥ **1.1.2** ॥

வாழாட் பட்டு நின்றீர் உள்ளீரேல் ⋆
வந்து மண்ணும் மணமும் கொண்மின் ⋆
கூழாட் பட்டு நின்றீர்களை ⋆
எங்கள் குழுவினில் புகுதலொட்டோம் ⋆
ஏழாட் காலும் பழிப்பிலோம் நாங்கள் ⋆
இராக்கதர் வாழ் ⋆
இலங்கை பாழாளாகப் படை பொருதானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.3** ॥

ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம் வந்து ⋆
எங்கள் குழாம் புகுந்து ⋆
கூடு மனம் உடையீர்கள் வரம்பொழி ⋆
வந்தொல்லைக் கூடுமினோ ⋆
நாடு நகரமும் நன்கறிய ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பாடு மனம் உடைப் பத்தர் உள்ளீர் ! ⋆
வந்து பல்லாண்டு கூறுமினே ॥ **1.1.4** ॥

அண்டக்குலத்துக்கதிபதி ஆகி ⋆
அசுரர் இராக்கதரை ⋆
இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த ⋆
இருடீகேசன் தனக்கு ⋆

தொண்டக் குலத்தில் உள்ளீர் ! வந்தடி தொழுது ⋆
ஆயிர நாமம் சொல்லி ⋆
பண்டைக் குலத்தைத் தவிர்ந்து ⋆
பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்மினே || **1.1.5** ||

எந்தை தந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன் ⋆
ஏழ் படி கால் தொடங்கி ⋆
வந்து வழிவழி ஆட்செய்கின்றோம் ⋆
திருவோணத் திருவிழவில் அந்தியம் போதில் அரியுருவாகி ⋆
அரியை அழித்தவனை ⋆
பந்தனை தீரப் பல்லாண்டு ⋆
பல்லாயிரத்தாண்டென்று பாடுதுமே || **1.1.6** ||

தீயிற் பொலிகின்ற செஞ்சுடர் ஆழி ⋆
திகழ் திருச்சக்கரத்தின் ⋆
கோயிற்பொறியாலே ஒற்றுண்டு நின்று ⋆
குடிகுடி ஆட்செய்கின்றோம் ⋆
மாயப் பொருபடை வாணனை ⋆
ஆயிரந் தோளும் பொழி குருதி பாய ⋆
சுழற்றிய ஆழி வல்லானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே || **1.1.7** ||

நெய்யிடை நல்லதோர் சோறும் ⋆
நியதமும் அத்தாணிச் சேவகமும் ⋆
கையடைக் காயும் கழுத்துக்குப் பூணொடு ⋆
காதுக்குக் குண்டலமும் ⋆
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து ⋆
என்னை வெள்ளுயிர் ஆக்க வல்ல ⋆

பையுடை நாகப் பகைக்கொடியானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுவனே ‖ **1.1.8** ‖

உடுத்துக் களைந்த நின் பீதகவாடை உடுத்துக் ⋆
கலத்ததுண்டு ⋆
தொடுத்த துழாய்மலர் சூடிக் களைந்தன ⋆
சூடுமித்தொண்டர்களோம் ⋆
விடுத்த திசைக் கருமம் திருத்தித் ⋆
திருவோணத் திருவிழவில் ⋆
படுத்த பைந்நாகணைப் பள்ளிகொண்டானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ‖ **1.1.9** ‖

எந்நாள் எம்பெருமான் ⋆
உன்தனக்கடியோம் என்றெழுத்துப்பட்ட அந்நாளே ⋆
அடியோங்கள் அடிக்குடில் ⋆
வீடு பெற்றுய்ந்தது காண் ⋆
செந்நாள் தோற்றித் ⋆
திருமதுரையுள் சிலைகுனித்து ⋆
ஐந்தலைய பைந்நாகத் தலை பாய்ந்தவனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுதுமே ‖ **1.1.10** ‖

‡ அல்வழக்கொன்றும் இல்லா ⋆
அணி கோட்டியர் கோன் ⋆
அபிமான துங்கன் செல்வனைப்போலத் ⋆
திருமாலே ! நானும் உனக்குப் பழவடியேன் ⋆
நல்வகையால் நமோ நாராயணாவென்று ⋆
நாமம் பல பரவி ⋆

பல்வகையாலும் பவித்திரனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுவனே ॥ **1.1.11** ॥

‡ பல்லாண்டென்று பவித்திரனைப் ⋆
பரமேட்டியை ⋆
சார்ங்கம் என்னும் வில்லாண்டான் தன்னை ⋆
வில்லிபுத்தூர் விட்டுசித்தன் விரும்பிய சொல் ⋆
நல்லாண்டென்று நவின்றுரைப்பார் ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பல்லாண்டும் பரமாத்மனைச் ⋆
சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே ॥ **1.1.12** ॥

## பெரிய திருமொழி – கம்பமா

‡ கம்ப மா கடல் அடைத்திலங்கைக்கு மன் ⋆
கதிர் முடி அவை பத்தும் அம்பினால் அறுத்து ⋆
அரசவன் தம்பிக்கு ⋆
அளித்தவன் உறை கோயில் ⋆
செம் பலா நிரை செண்பகம் மாதவி ⋆
சூதகம் வாழைகள் சூழ் ⋆
வம்புலாம் கமுகோங்கிய நாங்கூர் ⋆
வண் புருடோத்தமமே ॥ **4.2.1** ॥

பல்லவம் திகழ் பூங்கடம்பேறி ⋆
அக்காளியன் பணவரங்கில் ⋆
ஒல்லை வந்துறப் பாய்ந்தரு நடம் செய்த ⋆
உம்பர் கோன் உறை கோயில் ⋆
நல்ல வெந் தழல் மூன்று நால் வேதம் ⋆
ஐ வேள்வியோடாறங்கம் ⋆

வல்ல அந்தணர் மல்கிய நாங்கூர் ⋆
வண் புருடோத்தமமே ॥ **4.2.2** ॥

அண்டர் ஆனவர் வானவர் கோனுக்கென்று ⋆
அமைத்த சோறதுவெல்லாம் உண்டு ⋆
கோ நிரை மேய்த்தவை காத்தவன் ⋆
உகந்தினிதுறை கோயில் ⋆
கொண்டலார் முழவிற் குளிர் வார் பொழில் ⋆
குல மயில் நடம் ஆட ⋆
வண்டு தான் இசை பாடிடு நாங்கூர் ⋆
வண் புருடோத்தமமே ॥ **4.2.3** ॥

பருங்கை யானையின் கொம்பினைப் பறித்து ⋆
அதன் பாகனைச் சாடிப் புக்கு ⋆
ஒறுங்க மல்லரைக் கொன்று ⋆
பின் கஞ்சனை உதைத்தவன் உறை கோயில் ⋆
கரும்பினூடுயர் சாலிகள் விளை தரு ⋆
கழனியில் மலி வாவி ⋆
மருங்கெலாம் பொழில் ஓங்கிய நாங்கூர் ⋆
வண் புருடோத்தமமே ॥ **4.2.4** ॥

சாடு போய் விழத் தாள் நிமிர்த்து ⋆
ஈசன் தன் படையொடும் கிளையோடும் ஓட ⋆
வாணனை ஆயிரம் தோள்களும் ⋆
துணித்தவன் உறை கோயில் ⋆
ஆடு வான் கொடி அகல் விசும்பணவிப் போய்ப் ⋆
பகலவன் ஒளி மறைக்கும் ⋆

மாட மாளிகை சூழ் தரு நாங்கூர் ⋆
வண் புருடோத்தமமே ॥ **4.2.5** ॥

அங்கையால் அடி மூன்று நீர் ஏற்று ⋆
அயன் அலர் கொடு தொழுதேத்த ⋆
கங்கை போதரக் கால் நிமிர்த்தருளிய ⋆
கண்ணன் வந்துறை கோயில் ⋆
கொங்கை கோங்கவை காட்ட ⋆
வாய் குமுதங்கள் காட்ட மா பதுமங்கள் ⋆
மங்கைமார் முகம் காட்டிடு நாங்கூர் ⋆
வண் புருடோத்தமமே ॥ **4.2.6** ॥

உளைய ஒண் திறல் பொன் பெயரோன் ⋆
தனதுரம் பிளந்துதிரத்தை அளையும் ⋆
வெம் சினத்தரி பரி கீறிய ⋆
அப்பன் வந்துறை கோயில் ⋆
இளைய மங்கையர் இணை அடிச் சிலம்பினோடு ⋆
எழில் கொள் பந்தடிப்போர் ⋆
கை வளையின் நின்றொலி மல்கிய நாங்கூர் ⋆
வண் புருடோத்தமமே ॥ **4.2.7** ॥

வாளை ஆர் தடங்கண் உமை பங்கன் ⋆
வன் சாப மற்றது நீங்க ⋆
மூளை ஆர் சிரத்தைய முன் அளித்த ⋆
எம் முகில் வண்ணனன் உறை கோயில் ⋆
பாளை வான் கமுகூடுயர் தெங்கின் ⋆
வன் பழம் விழ வெருவிப் போய் ⋆

வாளை பாய் தடம் சூழ் தரு நாங்கூர் ⋆
வண் புருடோத்தமமே ॥ **4.2.8** ॥

இந்து வார் சடை ஈசனைப் பயந்த ⋆
நான் முகனைத் தன் எழில் ஆரும் ⋆
உந்தி மா மலர் மீமிசைப் படைத்தவன் ⋆
உகந்தினிதுறை கோயில் ⋆
குந்தி வாழையின் கொழுங்கனி நுகர்ந்து ⋆
தன் குருளையைத் தழுவிப் போய் ⋆
மந்தி மாம்பணை மேல் வைகும் நாங்கூர் ⋆
வண் புருடோத்தமமே ॥ **4.2.9** ॥

‡ மண்ணுள் ஆர் புகழ் வேதியர் நாங்கூர் ⋆
வண் புருடோத்தமத்துள் ⋆
அண்ணல் சேவடிக் கீழ் அடைந்துய்ந்தவன் ⋆
ஆலி மன் அருள் மாரி ⋆
பண்ணுள் ஆர் தரப் பாடிய பாடல் ⋆
இப்பத்தும் வல்லார் ⋆
உலகில் எண்ணிலாத பேர் இன்பம் உற்று ⋆
இமையவரோடும் கூடுவரே ॥ **4.2.10** ॥

திரு புருசோத்தமநாயகி சமேத புருசோத்தமன் திருவடிகளே சரணம்